மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இந்தப் பாதையை அகலப்படுத்துவதற்குச் சுமார் 70 இலட்சம் ரூபாய் செலவு ஆகும். ஆகவே, தற்போதுள்ள நிதிநிலை அடிப்படையில் அதைப் பராமரித்துக் கொண்டு இருக்கிறோமே தவிர அதை அகலப்படுத்துவதற்கு, பலப்படுத்துவதற்கு இப்பொழுது இந்த ஆண்டு வாய்ப்பு இல்லை.

திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது நடக்கிற ஆட்சியில் கிராமப் பகுதிகளில் சாலைகளைச் சீர்படுத்தவேண்டும் என்பதை மனத்திற்கொண்டு பல திட்டங்களைத் தீட்டியிருக்கின்றார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் தாங்கள் செய்தால் இந்த அரசுக்கு நல்ல பெருமை கிடைக்கும் என்பதைக் கூறிக்கொண்டு, இந்தத் திட்டத்தை நீங்கள் மிக விரைவில் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை மனத்திற்கொண்டு கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை மேற்கொண்டு அதை அரசு நடத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, கிராமச் சாலை திட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி வேறு. இது. MDR (Major District Road)க்கு ஒதுக்கப்படுகிற பணம் வேறு. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தைக் கவனத்திற்கொண்டு நிதிநிலைமைக்கேற்ப அரசு இதை செய்ய முன்வரும்.

கொள்ளிடம் குடிநீர்த் திட்டம்

*3324—திரு. க. சோ. கணேசன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) மின் அழுத்தம் குறைவு காரணமாக கொள்ளிடம் குடிநீர்த் திட்டம் சரிவர செயல்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதிக மின் அழுத்தம் உள்ள மோட்டார் பொருத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

(அ) கொள்ளிடத்திலிருக்கும் கோடாலிகருப்பூர் குடிநீர்த் திட்ட 11 கே. வி. உயர் மின் அழுத்த மின் இணைப்பு (Switch end)-இல் மின் அழுத்தக் குறைவு ஏதுமில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. க. சொ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடத்திலிருந்து ஜெயங்கொண்டத்திற்கு குடிநீர்த் திட்டம் 1975ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதிலே பொருத்தியிருக்கின்ற மின் மோட்டார் 40 குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டார் ஆகும். இப்பொழுது அந்தக் கொள்ளிடம் குடிநீர்த் திட்டத்தில் மேலும் பத்தாயிரம் மக்கள் தொகை கொண்ட, உடையார்பாளையம், வான திரையன்பட்டினம் ஆகிய கிராமங்களையும் பேரூராட்சிகளையும் இணைத்திருக்கின்றார்கள். ஆகவே, அதில் பொருத்தப்பட்டிருக்கின்ற 40 குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டார் அதற்குப் பற்றாக்குறையாக இருக்கிறது. ஆகவே, 70 குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டாரைப் பொருத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டத்தை குடிநீர் வடிகால் வாரியம்தான் பராமரித்துக் கொண்டிருக்கிறது. அதற்குத் தேவையான மோட்டாரை மாற்றியமைப்பது குடிநீர் வடிகால் வாரியத்தின் வேலை. மூலக் கேள்வி மின் அழுத்தம் குறைவாக இருக்கிறதா என்பதுதான். இல்லையென்பது தான் அதற்குப் பதில்.

திரு. க. சொ. கணேசன் : தலைவர் அவர்களே, இப்போது மின் அழுத்தம் குறைவாக இருக்கிற காரணத்தால், மோட்டாருடைய திறனும் குறைவாக இருக்கிற காரணத்தால், வேறு ட்ரான்ஸ்பார்மரை மாற்றும் உத்தேசம் அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இதுவரையில் மின் அழுத்தம் அந்தப் பகுதியில் குறைவாக இருக்கிறது என்று எந்த ஆதாரமான செய்தியும் வரவில்லை. அதிகாரிகள் இதுபற்றி ஆய்ந்து பார்த்தார்கள். இன்னும் சொல்லப்போனால் அவர் குறிப்பிடுகிற ''அந்த ஃபீடர் லைன்'' டாப்பிங் இல்லாமல், மறிக்காமல் ஓடுகிற, இடை வழியில் மின்சாரம் எடுத்துக்கொள்கிற இடர்ப்பாடு இல்லாமல் போகிற ஒன்றாகும். ஆகவே, எந்தக் காரணத்தைக் கொண்டும் மின் அழுத்தக் குறைவு அங்கே இல்லை. அவர்கள் குறிப்பிடுவது, இடையில் சில நாட்கள் பம்பிங் மோட்டார் கெட்டுப் போயிருந்தது. அதை வாட்டர் போர்டே சரிசெய்துவிட்டார்கள். இப்பொழுது எந்தப் பிரச்சினையும் இல்லை.